This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# ஏறக்குறைய சொர்க்கம்

## 1

*"இந்த கவிதை*
*எப்படி முடியும்*
*எங்கு முடியும்*
*என்று தெரியாது"*
*–ஆத்மாநாம்–'காகிதத்தில் ஒரு கோடு'*

கிழக்கு வாசலில் வாடகை சைக்கிள் எடுத்துக் கொண்டு நானும் சந்துருவும் கவிதை வரிகளைப் பண்டமாற்றிக் கொண்டு சென்றோம். குளிர்ந்த காற்று பனியனுக்குள் விளையாடியது.

"சைக்கிள்ல பெண் பார்க்கப் போற புதுக் கவிஞன் திருச்சி ஜில்லாவிலே நீ ஒருத்தன் தாண்டா," என்றான்.

"சந்துரு! பெண்ணைப் பார்க்கப் போறது நான். ஆனா சம்மதம் தெரிவிக்கப் போறது நீ," என்றேன்.

"பார்க்கலாம்," என்றான்.

பெயிண்ட் அடித்த கொம்புடன் மாடுகளை நடத்தி அழைத்துச் சென்றவர்கள்–

*"கொல்லையில கொய்யாமரம்*
*கொண்டையிலே தாழம்பூவாம்*
*தாழம்பூ வாசங்கண்டு அவன்*
*தடவிவாரான் சாமத்திலே"*

என்று பாடியது திருச்சி மாவட்டத்து அசல் தெம்மாங்கு என்றான் சந்துரு.

அவனுக்கு எல்லாம் தெரியும். நண்பன், நல்லாசிரியன். இவன் இல்லாவிட்டால் கவைக்குதவாமல் பக்கம் பக்கமாகக் கவிதைகள் மட்டும் எழுதிக் கொண்டிருப்பேன். வாழ்க்கையில் முக்கிய கட்டங்களைத் திருத்தி அமைத்தவன். அவன் சொல்லித்தான் ஃப்ராஸ்ட் படித்தேன். ப்ரௌஸ்ட் படித்தேன். பாங்கு பரீட்சை விளம்பரத்தை அவன்தான் தேடித் தந்தான். தேடி, டில்லி தர்யாகஞ்சிலிருந்து புத்தகங்களை வரவழைத்துப் பயிற்சி தந்து பரீட்சை எழுத வைத்து... சந்துரு இல்லையெனில் நான் ஒரு...

திருவெள்ளறைக் கோயிலைப் பற்றிப் பேசிக்கொண்டே வெண்மையான குன்றத்தைக் கடந்து சென்றோம். பயிர் செய்து அலுத்திருந்த நிலம். குறை சொல்ல முடியாத நீலவானம். பளீர் என்று பித்தளைப் பாத்திரங்களை வாய்க்காலில் துலக்கிவிட்டு வீட்டுக்குச் செல்லும் பெண்களின் வியப்பைக் கடந்து 'ட்ரிங்கரிங்' என்று வேண்டுமென்றே மணியடித்துக் கொண்டு அந்த வீட்டை விசாரித்துப் போனோம்.